இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 30-11-2024

# மதச்சார்பற்ற சோசலிசம்

**இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு 75-ஆவது ஆண்டு விழா கொண்டாடும் நேரத்தில் அந்தச் சட்டத்தை சிதைக்கும் செயல்களும் ஒரு பக்கம் நடக்கத்தான் செய்கின்றன.**

'இந்திய அரசியலமைப்புச் சட்டம் முழுமையானது அல்ல' என்று மெத்தப்படித்த மேதாவியான தமிழ்நாட்டு ஆளுநர் ரவி சொல்லித் திரிவதை அனைவரும் அறிவோம்.

"இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் சோசலிசம், மதச்சார்பின்மை ஆகிய வார்த்தைகளை நீக்க வேண்டும்" என்று இப்போது பா.ஜ.க.வில் இருக்கும் சுப்பிரமணியன் சுவாமி, வழக்கறிஞர் அஷ்வினி உபாத்யாய், விஷ்ணு சங்கர் ஜெயின், பல்ராம் சிங் ஆகியோர் உச்சநீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார்கள். இதனை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது.

உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணா, பி.வி.சஞ்சய் குமார் ஆகியோர் அமர்வு, "அரசியலமைப்பை திருத்தும் அதிகாரத்தை நாடாளுமன்றம் சரியாக செய்துள்ளது" என்று உறுதிபடுத்தியது. இதை விட பெரிய அமர்வுக்கு கொண்டு போய் விவாதத்தை இழுக்க நினைத்தார்கள். அதற்கும் உச்சநீதிமன்றம் அனுமதிக்கவில்லை. ஆரம்ப நிலையிலேயே தள்ளுபடி செய்யப்பட்டு இருக்கின்றன இந்த மனுக்கள்.

இந்திய அரசியல் சட்டமானது இந்திய நாட்டை, 'இறையாண்மை மிக்க, சோசலிச, மதச் சார்பற்ற, ஜனநாயகக் குடியரசு' என்று வரையறுக்கிறது.

அரசமைப்புச் சட்டத்தின் 42-ஆவது திருத்தத்தின்படி சோசலிஸ்ட், மதச்சார்பற்ற ஆகிய சொற்கள் சேர்க்கப்பட்டது. இதனைத்தான் செல்லாது என்று சொல்லி நீக்கச் சொல்கிறார்கள். அரசியலைப்புச் சட்டம் 100க்கும் மேற்பட்ட முறை திருத்தப்பட்டுள்ளது. அதனையும் நீக்கச் சொல்வார்களா இவர்கள்?

**சோசலிசம், மதச்சார்பற்ற ஆகிய சொற்களை இவர்கள் நீக்கச் சொல்கிறார்களே, இறையாண்மை , ஜனநாயகம் ஆகிய சொற்கள் மீது நம்பிக்கை உள்ளவர்களா இவர்கள்? ஜனநாயக நெறிமுறைகளை கடைப்பிடிப்பவர்களா இவர்கள்? ஒற்றைச் சர்வாதிகார, எதேச்சதிகார நாடாக மாற்றத் துடிப்பவர்கள் அல்லவா இவர்கள்? முதலில் இந்த இரண்டு சொற்களையும் நீக்குவார்கள். பின்னர் அடுத்த இரண்டு சொற்களையும் நீக்க முயற்சிப்பார்கள்.**

" 'சோசலிஸ்ட்' மற்றும் 'மதச்சார்பற்ற' சொற்களை மேற்கத்திய கருத்தாக்கம் போல் கருத வேண்டிய அவசியமில்லை" என்றும் உச்சநீதிமன்றம் தெளிவாகச் சொல்லி விட்டது. மதச்சார்பற்ற என்பது மேற்கத்திய கருத்து என்றுதான் இங்கே இருக்கும் ரவியும் சொல்லிச் சுற்றிக் கொண்டிருக்கிறார்.

அவசர நிலைக்காலத்தில் சேர்த்து விட்டார்கள் என்ற வாதத்தை உச்சநீதிமன்றம் நிராகரித்து விட்டது.

2-11-1976 அன்று அரசமைப்புச் சட்டத்தில் 42-ஆவது திருத்தத்தின் மூலம் மதச்சார்பின்மை, சோசலிசம் என்ற வார்த்தைகளை பாராளுமன்றம் சேர்த்தது. அதன் பிறகு ஜனதா அரசாங்கம் வந்தது. அந்த அரசாங்கமும் இதனை ஏற்றுக் கொண்டது. ஜனதா அரசாங்கமும் இத்திருத்ததை தனது நாடாளுமன்றத்தில் வைத்து ஏற்றுக் கொண்டது என்பதை உச்சநீதிமன்றம் சொல்லி இருக்கிறது. அந்த ஜனதா கட்சியில்தான் சுப்பிரமணிய சுவாமி இருந்தார்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 368, பாராளுமன்றத்திற்கு அரசமைப்புச் சட்டத்தின் எந்த பிரிவையும் பிந்தைய தேதி முதல் அமலுக்கு வரும் என்று திருத்தம் செய்யும் உரிமையை வழங்கி உள்ளதால், அது முகப்புரை திருத்தத்திற்கும் பொருந்தும் என்று கூறியுள்ளது இந்தத் தீர்ப்பு.

இந்தியாவில்சோசலிசம்என்பதுசமத்துவம்பேணும்அரசைத்தான் குறிக்கும் என்பதையும், அனைவருக்கும் சம வாய்ப்பை வழங்கும் பொதுநல அரசைத்தான் அது குறிக்கிறது என்பதையும், இது சர்வாதிகாரக் கோட்பாடு அல்ல என்பதையும் தெளிவுபடுத்தி இருக்கிறது உச்சநீதிமன்றம். 'தனியார் துறை இங்கு வளர்ச்சி அடைவதை சோசலிசம் என்ற சொல் ஒரு போதும் தடுக்கவில்லை. நாம் அனைவரும் தனியார் துறையாலும் பயனடைந்துள்ளோம்' என்றும் நீதிபதிகள் விளக்கி உள்ளார்கள்.

இந்த தீர்ப்பின் முத்தாய்ப்பான கருத்து என்ன என்றால், சோசலிசம், மதச்சார்பற்ற என்ற சொற்கள் முகவுரையில் மட்டுமில்லை, இது அரசியலமைப்பின் பல்வேறு கூறுகளிலும் இடம்பெற்றுள்ளது என்று சொல்லி இருப்பதுதான்.

**"அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் உள்ள சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம், நீதி போன்ற வார்த்தைகளுக்கான பொருள் மதச்சார்பின்மை என்பதே"** என்று அழுத்தம் திருத்தமாக தீர்ப்பில் கூறியுள்ளது உச்ச நீதிமன்றம்.

எந்தக் குடிமகனும் தான் விரும்பும் மதத்தை சார்ந்து இருப்பதற்கும் அதை பிரச்சாரம் செய்வதற்கும் அடிப்படை உரிமை உள்ளது என்று கூறும் அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 25-ன் பொருளும் மதச்சார்பின்மைதான் என்று கூறியுள்ளது உச்சநீதிமன்றம். 'அரசியலமைப்புச் சட்டத்தை உற்று நோக்கினால் பல இடங்களில் மதச்சார்பின்மை என்பது முக்கியக் கருதுகோளாக இருப்பதைப் பார்க்கலாம்' என்று சொல்லி இருக்கிறார்கள் உச்சநீதிமன்ற நீதிபதிகள்.

**சோசலிசம், மதச்சார்பின்மை ஆகிய இரண்டும் முகவுரையில் மட்டுமல்ல, இந்திய அரசியலைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்பின் முக்கியக் கருதுகோள் ஆகும் என்று உச்சநீதிமன்றம் சொன்னதை ஏற்றுக் கொண்டு செயல்பட வேண்டும். நிராகரிக்கப்பட்டது வழக்கு மட்டுமல்ல, மதச்சார்பு என்ற கருத்தாக்கமும் நிராகரிக்கப்பட்டுள்ளது என்பதை உணர வேண்டும்.**

---

## 'கவிப்பேரரசு வைரமுத்து படைப்புலகம்' பன்னாட்டுக் கருத்தரங்கம்!

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு அழைப்பு!

## நேரில் சந்தித்து வைரமுத்து வழங்கினார்!

சென்னை, நவ.30-

கவிப்பேரரசு வைரமுத்துவின் கவிதைக்கு வயது 52. அவரது திரைப்பாட்டுக்கு வயது 44. இதுவரை 39 நூல்கள் எழுதியிருக்கிறார். சாகித்ய அகாடமி விருதுபெற்ற இவரது கள்ளிக்காட்டு இதிகாசம் 10 இந்திய மொழிகளில் பெயர்க்கப்பட்டு வெளிவந்திருக்கிறது; மேலும் 12 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது. இந்தியாவின் சிறந்த பாடலாசிரியருக்காக 7 ஜனாதிபதிகளிடம் விருது பெற்றிருக்கிறார். இவரது படைப்புகளை ஆராய்ச்சி செய்து இதுவரை 180 பேர் டாக்டர் பட்டமும், எம்.பில் பட்டமும் பெற்றிருக்கிறார்கள். இந்தியாவின் உயரிய விருதுகளான பத்மஸ்ரீ மற்றும் பத்மபூஷண் விருதுகளையும் இவர் பெற்றிருக்கிறார்.

கவிப்பேரரசு வைரமுத்து படைப்புகள் குறித்த பன்னாட்டுக் கருத்தரங்கம் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் சென்னையில் நடைபெறுகிறது. உலகெங்கிலுமிருந்தும் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும், ஆராய்ச்சி அறிஞர்களும் கலந்துகொண்டு கட்டுரை வாசிக்கிறார்கள். கருத்தரங்கம் முழு நாள் நிகழவிருக்கிறது. மாலையில் நிகழும் நிறைவுவிழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொள்ள வேண்டும் என்று கவிப்பேரரசு வைரமுத்து நேரில் சென்று அழைப்பு விடுத்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (28.11.2024) முகாம் அலுவலகத்தில், கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் சந்தித்து, 2025–ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள 'கவிப்பேரரசு வைரமுத்து படைப்புலகம்' குறித்த பன்னாட்டுக் கருத்தரங்கத்தின் நிறைவு விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அழைப்பு விடுத்தார்.

---

## சொத்து வரி உயர்வுக்குக் காரணமான எடப்பாடி பழனிசாமி

# அ.தி.மு.க. கலவர ஆய்வை திசை திருப்ப நீலிக்கண்ணீர் வடிக்கிறார்!

## நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு கடும் கண்டனம்!

**சென்னை, நவ.30-**

**"சொத்து வரி உயர்வுக்குக் காரணமான எடப்பாடி பழனிசாமி தனது கட்சியான அ.தி.மு.க. கலவர ஆய்வை திசை திருப்ப நீலிக்கண்ணீர் வடிக்கிறார்" என்று நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.**

**இது குறித்து அமைச்சர் கே.என். நேரு அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-**



திருப்பூர் மாநகராட்சி மாமன்றக் கூட்டத்தில் சொத்துவரி திருத்த தீர்மானத்திற்கு எதிராக அ.தி.மு.க. போராட்ட நாடகத்தை நடத்தி உள்ளது. மாநிலங்களின் உள்ளாட்சி அமைப்புகள் கட்டாயம் சொத்து வரியினை ஆண்டுதோறும் உயர்த்தியே ஆக வேண்டும் என ஒன்றிய அரசு நிபந்தனை விதித்தபோது வாய் மூடி அமைதியாய் இருந்த பழனிச்சாமி இன்று திடீரென மக்கள் மீது அக்கறை கொண்டவராய் வேடம் போடுவது வேடிக்கை.

ஒன்றிய அரசால் அமைக்கப்பட்ட 15ஆவது நிதி ஆணையம் தனது அறிக்கையில், 2022-2023-ஆம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகள் மானியம் பெறுவதற்கான தகுதியைப் பெறும் பொருட்டு 2021-22-ஆம் ஆண்டில் சொத்துவரி தள வீதங்களை (Floor rates) அறிவிக்கை செய்ய வேண்டும். மாநிலத்தின் மொத்த உள்நாட்டு வளர்ச்சிக்கு ஏற்றவாறு "ஆண்டுதோறும் சொத்துவரி வீதத்தை உயர்த்திட வேண்டும்" என நிபந்தனைகளை விதித்துள்ளது'. அதேபோல ஒன்றிய அரசின் 'தூய்மை இந்தியா திட்டம்' மற்றும் அம்ரூட் 2.0 ஆகியவற்றுக்கும் இதே நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

ஒருவேளை தமிழ்நாடு அரசு இதை கடைப்பிடிக்காத பட்சத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2021-26 வரை நமக்கு கொடுக்கப்பட வேண்டிய ஒன்றிய அரசின் மானியம் ரூ.4,36,361 கோடி நிறுத்தி வைக்கப்படும், அதோடு தூய்மை இந்தியா திட்டம், அம்ரூட் 2.0 திட்டம் ஆகியவற்றிற்கான நிதியும் ஒதுக்கப்படாது.

**முழுப்பூசணியை சோற்றில் மறைப்பதா?**

ஒன்றிய அரசு இப்படி கடுமையான விதிகளை 15-வது நிதியாணையத்தின் மூலம் விதித்தபோது அவர்களோடு நட்புறவில் இருந்தவர் தான் எடப்பாடி பழனிச்சாமி. தற்போது தமிழ்நாடு அரசு தான் சொத்து வரி உயர்வுக்கு காரணம் என்று சொல்வது முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல உள்ளது.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் ஊழல் செய்து உள்ளாட்சி அமைப்புகளை எல்லாம் திவாலாக்கிய எடப்பாடி பழனிச்சாமி அரசியல் ஆதாயத்திற்காகவும் தங்கள் கட்சியின் கலவர ஆய்வுக் களேபரங்களை மறைத்து திசை திருப்பவும் மக்கள் மீது அக்கறை உள்ளதைப் போல நீலிக்கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்.

15வது நிதியாணையம் சொத்து வரி உயர்வைக் கட்டாயமாக்கியதன் காரணமாக வேறுவழியின்றி, தமிழ்நாட்டு மக்கள் மீது மாறா அன்பும் அக்கறையும் கொண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏழை எளிய மக்கள் பாதிக்காத வண்ணம் மிக மிக குறைந்த அளவு சொத்து வரியினை உயர்த்த உத்தரவிட்டார்.

அந்த வகையில் ஏழை எளிய நடுத்தர மக்கள் அதிகம் பாதிக்கப்படாத வகையில் குடியிருப்புகளின் பரப்பளவை 4 வகைகளாக பிரித்து வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பிற மாநிலங்களை ஒப்பிடும்போது தமிழ்நாட்டில் சொத்து வரியானது மிக மிக குறைந்தளவே விதிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

## பிரதமர் மோடியின் முழுக் கவனமும்

# பணவீக்கத்தைக் குறைத்துக் காட்டுவதில் மட்டுமே உள்ளது!

## காங்கிரஸ் கட்சி குற்றச்சாட்டு!

*புதுடெல்லி, நவ.30-*

*பிரதமர் மோடியின் முழு கவனமும் பணவீக்கத்தை குறைத்து காட்டுவதில் மட்டுமே உள்ளது என்று காங்கிரஸ் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.*

*காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ள சமூகவலை தளப் பதிவில், நுகர்வோர் விலை குறியீடு மற்றும் மொத்த விற்பனை குறியீட்டை பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க., அரசு குறைத்துக் காட்டுவதாக சாடியுள்ளார்.*

*பணவீக்கம் கட்டுக்குள் இருப்பதாக ஒன்றிய அரசின் புள்ளி விவரங்கள் கூறுகிறது என தெரிவித்துள்ள ஜெய்ராம் ரமேஷ், ஆனால் மக்களின் சுமை குறையவில்லை என்று குற்றம் சாட்டியுள்ளார்.*

*நாட்டில் விலைவாசி தொடர்ந்து ஏறுமுகமாகவே இருந்து வருகிறது என தெரிவித்துள்ள அவர், பணவீக்கத்தை கட்டுப்படுத்தாமல், அதனை குறைத்து காட்டுவதில் மட்டுமே மோடி அரசு கவனமாக உள்ளதாக கண்டனம் தெரிவித்துள்ளார்.*

*பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை உடனே மேற்கொள்ள வேண்டும் என ஜெய்ராம் ரமேஷ் வலியுறுத்தியுள்ளார்.*



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாளை முன்னிட்டு அவருக்கு கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் வாழ்த்துத் தெரிவித்தார். உடன் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.